**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,**
**பெரியகுளம்.**

**முன்னிலை:** திரு.C.சங்கர், B.A.,M.L.,P.G.D.C.F.S.
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வுநீதிபதி,
பெரியகுளம்.

திருவள்ளுவராண்டு 2056, விசுவாவசு வருடம் ஆடி மாதம் 19-ம் நாள்
2025-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 04-ம் தேதி திங்கள் கிழமை

CNR.No: TNTH09 000827 2023

**அசல் வழக்கு எண் : 157/2023**

மதுரை மாவட்டம், செட்டிகுளம், ஊமச்சிகுளம், A.T. சபரி செல்லம்மாள் நகர், பிளாட் எண்.67, என்ற விலாசத்தில் வசித்துவரும் குருசாமி அவர்கள் குமாரர், இந்து சுமார் 55 வயதுள்ள முருகன்.

.... வாதி

**/எதிர் /**

1. தேனி மாவட்டம், ஆண்டிபட்டி வட்டம், ரோசனபட்டி அஞ்சல், ஆசாரிபட்டி, கிழக்குத்தெரு, க.எண்.2661, என்ற விலாசத்தில் இயங்கி வரும் தமிழ்நாடு தேவேந்திரகுல அரசு ஊழியர்கள், பேராசிரியர்கள் மற்றும் ஆசிரியர்கள் முன்னேற்ற சங்கம், அதன் தலைவர் P.ராமச்சந்திரன் மூலம்.

2. தேனி மாவட்டம், ஆண்டிபட்டி வட்டம், ரோசனபட்டி அஞ்சல், ஆசாரிபட்டி, கிழக்குத்தெரு, க.எண்.2661, என்ற விலாசத்தில் வசித்து வரும் பெரியசாமி அவர்கள் குமாரரும் மேற்படி விலாசத்தில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு தேவேந்திரகுல அரசு ஊழியர்கள், பேராசிரியர்கள் மற்றும் ஆசிரியர்கள் முன்னேற்ற சங்கத்தின் தலைவருமான இந்து சுமார் 39 வயதுள்ள P.ராமச்சந்திரன்.

...பிரதிவாதிகள்

பிரதிவாதிகள், வாதிக்கு 13.03.2020 ஆம் தேதிய கடன் ஒப்பந்தத்தின் பேரில் அசலுக்கும் வட்டிக்கும் ரூ.13,57,333/— தொகை செலுத்த வேண்டியும், வழக்குத் தேதி முதல் தொகை முழுவதும் வசூலாகும் தேதி வரை அசல் தொகை ரூ.10,00,000/— த்திற்கு மாதம் ஒன்றுக்கு 1% வீதம் பின்வட்டி சேர்த்து பிரதிவாதிகள் வாதிக்குச் செலுத்த வேண்டுமென்ற கட்டளையைப் பிறப்பிக்க வேண்டியும், வழக்கின் செலவு தொகையை பிரதிவாதிகள், வாதிக்கு செலுத்தும்படி உத்தரவு பிறப்பிக்க வேண்டியும், வழக்கின் தன்மைக்கும், சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கும் ஏற்ப சமூகம் நீதிமன்றம் தகுதியானது என்று கருதும் இதர பரிகாரமோ அல்லது பரிகாரங்களோ இருப்பின் அவைகளையும் பிறப்பிக்க வேண்டியும் வாதிகளால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| வழக்கு தாக்கல் செய்யப்பட்ட நாள்: | 08.03.2023 |
| வழக்கு மூலம் எழுந்த நாள்: | 13.03.2020, 22.02.2023, 25.02.2023, 12.03.2023 ஆகிய தேதிகளில் ஆசாரிபட்டி கிராமத்தில் உற்பத்தி. |

## <u>நீதிமன்ற முத்திரைக் கட்டண விபரம்</u>

| | |
|---|---|
| பிரதிவாதி கடனுறுதிச் சீட்டின் பேரில் வாதிக்கு செலுத்த வேண்டிய அசல் தொகை : | ரூ.10,00,000/— |
| அசல் தொகை ரூ.10,00,000/— த்திற்கு 13.03.2020 முதல் 08.03.2023 வரை 35 மாதம் 22 நாட்களுக்கு மாதம் 1 % வட்டி : | ரூ.3,57,333/— |
| மொத்த தொகையான ரூ.10,57,333/— க்கு 1955 ஆம் ஆண்டின் தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணம் மற்றும் வழக்கு மதிப்பீட்டுச் சட்டத்தின் பிரிவு 22ன் படி செலுத்தப்பட்டுள்ள நீதிமன்றக் கட்டணம்: | ரூ.40,720/— |

இந்த வழக்கானது என் முன்பாக 04.08.2025 ஆம் தேதி விசாரணைக்கு வந்த போது வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.தங்கதுரை அவர்கள் முன்னிலையாகியும் மற்றும் பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. பவுன்ராஜ் அவர்கள் முன்னிலையாகியும், வாதிகள் அழைத்தும் ஆஜராகாத காரணத்தால் இந்நீதிமன்றம் பிறப்பித்திடும்.

**<u>தீர்ப்பாணை</u>**

1. This suit is dismissed for default.
2. No cost.

2025–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 04–ம் தேதி திங்கள் கிழமை இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

SANKAR Digitally signed by SANKAR Date: 2025.08.04 15:30:44 +0530

கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
பெரியகுளம்.

**Decree**

**OS. No.157/2023**

**Additional District And**
**Sessions Court,**
**Periyakulam, Theni District.**

**Dated 04.08.2025.**